வலயக் கல்வி அலுவலகம் - சம்மாந்துறை

முன்னோடி பரீட்சை Step - 02

வினாத்தாள் I

சுட்டெண்: ..... தரம்: 05 நேரம்: 45 நிமிடம்

பாடசாலை: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

1. உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
2. மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
3. மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களின் விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
4. ஏனைய வினாக்களுக்கு அறிவுறுத்தல்படி விடையளிக்குக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்


இறுதிப் புள்ளி	
இலக்கத்தில்	
எழுத்தில்	


	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திறகேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்	
மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	

www.ikeda.lk

1,2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியை தெரிவு செய்க.

1.





(1)





(2)



(3)

2.






(1)




(2)




(3)

3.




இவ்வுருவை கோடுகள் வழியே மடித்து காட்டப்பட்டுள்ளவாறு துளையிட்டபின் விரித்துப் பார்த்தால் தோன்றும் உரு


(1)




(2)




(3)




4.




இவ்வுருவை முகம்பார்க்கும் கண்ணாடியில் பார்த்தால் தோன்றும் விதம்



(1)



(2)



(3)


5.

FREE
TATA
TEN


கூட்டினுள் தரப்பட்ட சொற்களை ஆடியில் பார்க்கும்போது ஒரே மாதிரித் தோன்றும் சொல்


I. FREE II. TATA III. TEN


www.ikeduk

06. 

தரப்பட்ட வெட்டுருவைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட சதுரமுகியைத் தெரிவு செய்க?

(1) 

(2) 

(3) 

07. கீழே தரப்படடுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.


1. சிறந்த நூல்கள் நல்ல நண்பர்களைப் போன்றன.
2. சிறந்த நூல்கள் நல்ல நன்பர்களைப் போன்றன.
3. சிறந்த நூல்கள் நல்ல நண்பர்களைப் பொன்றன.

பொருத்தமான இணைமொழியைத் தெரிவு செய்க.

08. நரி ஒன்று பசியினால் ..... அலைந்தது.

1. மேலும் கீழும்
2. உள்ளும் புறமும்
3. அங்குமிங்கும்

09. கோலத்தை அவதானித்து? இடப்பட்டுள்ள இடத்தில் வரும் விடையைத் தெரிவு செய்க.



(1) 39
(2) 19
(3) 14


கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.


10. ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவதுண்டோ அப்பா.

இப்பாடலில் சாதியைப் பற்றி என்ன கூறப்படுகின்றது.

1. ஓடும் உதிரத்தில் இருக்கிறது.
2. ஒழுகும் கண்ணீரில் இருக்கிறது.
3. எதுவும் தெரியவில்லை.

11. ஆம் 12ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள இரண்டு கூடைகளில் விற்கப்பட்ட மாம்பழங்களின் விலைகளை கவனத்தில் கொண்டு விடையளிக்குக.





www.kedu.lk

கண்ணன் A கடையில் ரூபா 200க்கும் சீலன் B கடையில் ரூபா 200ற்கு மாம்பழங்கள் வாங்கினார்கள். யாரிடம் கூடுதலான பழங்கள் காணப்படும்?

1. கண்ணனிடம் 2. சீலனிடம் 3. கூறமுடியாது

12. A கடைக்காரன் B கடைக்கு போட்டியாக மூன்று மாம்பழங்களை ரூபா 60இற்கு விற்றான் எனின் இப்பொழுது இரண்டு கடைகளிலும் விற்கப்படும் மாம்பழங்களின் விலை தொடர்பான கூற்றுக்களில் சரியானது எது?

1. ஒரு மாம்பழத்தின் விலை கடை B யிலும் பார்க்க கடை A இல் அதிகமாகும்.
2. ஒரு மாம்பழத்தின் விலை இரண்டு கடைகளிலும் சமனாகும்.
3. ஒரு மாம்பழத்தின் விலை கடை A யிலும் பார்க்க கடை B யில் அதிகமாகும்.

13ம் 14ம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள வாக்கியத்தில் கோடிட்ட இடத்தில் சில எழுத்துக்கள் நீக்கப்பட்டுள்ளன. வாக்கியத்தை கருத்துள்ள பூரண வாக்கியமாக்குவதற்கு கோடிட்ட இடத்தில் வரவேண்டிய எழுத்துக்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

13. கன்றுக்குட்டி துள் ..... த்து விளையாடியது.

1. ளித் துள்ளி 2. ளி ஒழி 3. ளிக் குதி


14. நான் பரீட்சையில் சித்தியடைந் ....பி மகிழ்ச்சியடைந்தாள்.

1. தால் நண் 2. ததால் தம் 3. ததால்நண்


15. சானு பணம் இல்லாது கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த தனது நண்பனுக்கு தன்னிடமிருந்த பணத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தான். இச் சம்பவத்திற்குப் பொருத்தமான பழமொழி.

1. உப்பிட்டவரை உள்ளவும் நினை. 2. அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்.
3. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.


16. பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.




1. 42



2. 44



3. 46

17. 

17. உருவில் முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

18. எனது சட்டைப் பையில் மூன்று வகையான 9 நாணயங்கள் இருக்கின்றன. அவற்றின் மொத்தம் ரூபா 24 ஆகும். எனது பையில் இருக்கும் நாணயங்கள் யாவை?

1. ரூபா 5 நாணயங்கள் 2 ரூபா 2 நாணயங்கள் 3 ரூபா ஒரு நாணயங்கள் 4
2. ரூபா 5 நாணயங்கள் 3 ரூபா 2 நாணயங்கள் 2 ரூபா ஒரு நாணயங்கள் 3
3. ரூபா 5 நாணயங்கள் 3 ரூபா 2 நாணயங்கள் 3 ரூபா ஒரு நாணயங்கள் 3


www.ikedu.lk

19. சௌமி, கவினா, சாயி, ஆதி, சாமா, கேது ஆகியோர் பரீட்சையில் ஒன்றில் புள்ளிகள் முறையே 70,90,80,87,74,72ஆகும். இப்புள்ளிகளின் அடிப்படையில் மூன்றாம் நான்காம் இடங்களைப் பெற்றவர்கள் முறையே,

1. ஆதி, கவினா 2. சாயி, சாமா 3. கேது, சௌமி

20. தந்தை, தாய், மகள் ஆகியோரது வயதுகளின் கூட்டுத்தொகை 72 ஆகும். தாயின் வயது மகளின் வயதின் 3 மடங்காகும். தந்தையின் வயது மகளின் வயதின் 4 மடங்காகும். எனவே, தாயினதும் தந்தையினதும் வயதுகள் முறையே... 1. 27, 36 2. 36,36 3. 36, 27


21. பின்வரும் வலையுருவை மடித்து அமைக்கத்தக்கதாக திண்மம் எது?



1. சதுரமுகி
2. நான்முகி
3. கனவுரு

22. பை ஒன்றினுள் மஞ்சல் நிற மாபிள்கள் 5 நீல நிற மாபிள்கள் 4 பச்சை நிற மாபிள்கள் 3 வீதம் இருந்தன. பச்சை நிற மாபிள் ஒன்றை எடுப்பதற்கு முயற்சிக்க வேண்டிய தடவைகளின் எண்ணிக்கை யாது?

1. 7 2. 10 3. 9

23. 

இவ்வுருவில் A யினால் காட்டப்பட்டுள்ள கோணம்

1. செங்கோணத்திற்கு சமன்
2. செங்கோணத்தை விட குறைந்தது.
3. செங்கோணத்தை விட கூடியது.


24. ஏப்ரல் மாதம் 26ம் திகதி ஆரம்பமான கண்காட்சி ஒன்று 10 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்றது. கண்காட்சி முடிவடைந்த நாள் எது?

1. மே மாதம் 5ஆம் திகதி 2. மே மாதம் 6ஆம் திகதி 3. மே மாதம் 7ஆம் திகதி

25. பாடசாலையில் 4ஆம் பாடத்திற்காக காலை 9.00க்கு மணி அடித்தது எனின் 1ஆம் பாடத்திற்காக மணி ஒலித்த நேரம், (ஒரு பாடவேளை 30 நிமிடங்கள்)

1. மு.ப. 8.00 2. மு.ப. 7.30 3. மு.ப. 8.30

பின்வரும் கணிதச் செய்கையை அவதானித்து சரியான விடையைக் கண்டுபிடியுங்கள்.




26. உரு  இற்கு வழங்க்கூடிய பெறுமானம்

1) 2 2) 4 3) 6

www.ikeduk

27. உரு ○ + □ + ▽ ஆகியவற்றின் கூட்டுத்தொகை யாது?

1) 12 2) 14 3) 16

28. 

உருவில் நிழற்றப்பட்ட பகுதியின் தசம எண் யாது?

1) 0.3 2) 0.6 3) 0.7

29. ஐந்து மாணவர்களின் பிறந்த தினங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவர்களை வயது கூடியவரில் இருந்து குறைந்தவர் வரை ஒழுங்குபடுத்தினால் நடுவில் வருபவர் யார்?


கபிஷன்	-	2006.11.08	ருக்கூஷதன்	-	2006.08.01
விருஷன்	-	2006.09.14	ரெகோரி	-	2006.06.06
ரஜைனன்	-	2006.12.15			

1. கபிஷன் 2. விருஷன் 3. ருக்கூஷதன்

30. இரண்டு மோட்டார் வண்டிகள் ஓர் இடத்திலிருந்து புறப்பட்டு பின்னர் அவை ஒவ்வொன்றும் எதிர்திசைகளில் 100 மீற்றர் தூரம் செல்கின்றன. பின்னர் ஒரு வண்டி வலப்பக்கமும் மற்றைய வண்டி இடப்பக்கமும் திரும்பி ஒவ்வொன்றும் 200 மீற்றார் தூரம் செல்கின்றன. இப்போது இரண்டு வண்டிகளுக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு?

1. 600 மீற்றர் 2. 300 மீற்றர் 3. 200 மீற்றர்

31. உருவில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு பிள்ளை சதுர வடிவில் ஒரு பூப்பாத்தியைத் தயார் செய்து அதனைச் சுற்றி ஒரு வேலியை அமைத்து அம்புக்குறியினால் காட்டப்படும் யாதாயினும் வழியே பார்க்கும்போது அப்பக்கத்தில் 10 கம்பங்கள் காணப்படுமெனில் இவ்வேலிக்குப் பயன்படுத்தப்பட்ட கம்பங்களின் எண்ணிக்கை யாது?



1. 36 2. 40 3. 44

32. ஒரு குழந்தை சுகவீனமுற்றபோது அவனுக்கு மருந்து கொடுத்த சந்தர்ப்பத்தில்/ நிகழ்ந்த உரையாடல்

A. மகனை விரைவாக வைத்தியரிடம் அழைத்து செல்வோம்.

B. பிள்ளைக்கு நல்ல காய்ச்சல். இம்மருந்தைக் கொடுங்கள் விரைவில் குணம் அடையலாம்.

C. இப்போது உடல் நடுங்குதல் சிறிது குறைந்துள்ளது.

D. கசப்பு ஆனாலும் பரவாயில்லை மருந்து முழுவதையும் குடி

E. மகனுககு காய்ச்சல் போலுள்ளது.

1. ADCEB 2. EABDC 3. BDEAC


www.ikeau.lk

33. தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து விடையின் கீழ்க் கோடிடுக.

நீலம் மஞ்சள் பச்சை செம்மை
நிறமும் மாறுது செடி
நிறத்திற்கேற்ப வண்ணம் பல
நிதமும் சேருது.

இக்கவிதையில் குறிப்பிடும் பிராணி.

1. பச்சைக்கிளி 2. பச்சோந்தி 3. பச்சைத் தேரை



(1) (2) (3) (4)

34. மீற்றர் கோலை ஆக்குவதற்கு இப்பகுதிகளைச் சரியாகப் பொருத்த வேண்டிய விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.


1) 4,3,1,2 2) 1,3,2,4 3) 4,3,2,1

57	38	17	01
	45	09	30
23		6	24

35. சதுரத்திலுள்ள எண்களில் மிகப் பெரிய ஒற்றை எண்ணினதும் சிறிய இரட்டை எண்ணினதும் கூட்டுத் தொகை,

1. 63 2. 51 3. 91

36. கீழே தரப்பட்டுள்ள இரு உருக்களுக்கும் ஏற்ப A அளவுள்ள ஓர் அட்டைத்தாளிலிருந்து B அளவுள்ள எத்தனை வட்டங்களை உயர்ந்தபட்சம் வெட்டலாம்.




1. 20 2. 24 3. 30


www.lkedu.lk


37. என்னிடம் இருந்த பணத்தின் $\frac{1}{3}$ ஐ வியாபாரியிடம் கொடுத்து புத்தகம் ஒன்றை வாங்கியபோது ரூபா 200 மீதியாகக் கிடைத்தது எனின் என்னிடம் இருந்த பணம் எவ்வளவு?

1. ரூபா 100 2. ரூபா 150 3. ரூபா 300

38. நிறங்கள் சிவப்பு நீலம் என்பவற்றைக் காட்டும் மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

1. 

2. 

3. 

39. ஒரு போருந்தில் இருவர் வீதம் அமரத்தக்க 15 ஆசனங்களும் மூவர் வீதம் அமரத்தக்க 10 ஆசனங்களும் உள்ளன எனின்ன அப்பேரூந்தில் எத்தனை பேர் ஆகக் கூடுதலாக அமர்ந்து செல்லலாம்.?

1) 60 2) 50 3) 40

40. வியாபாரி ஒருவர் 2 பால்மா பக்கற்றுக்களை கொள்வனவு செய்யும் ஒருவருக்கு 5 இனிப்புக்களை இலவசமாகக் கொடுப்பார். பால்மா பக்கற்றுக்களை கொள்வனவு செய்த ஒருவருக்கு 15 இனிப்புக்கள் இலவசமாகக் கிடைத்தது. அதன்படி, அவர் கொள்வனவு செய்த பால்மா பக்கற்றுக்களின் எண்ணிக்கை என்ன?

1) 6 2) 3 3) 4

www.ikedu.lk

வலயக் கல்வி அலுவலகம் - சம்மாந்துறை

முன்னோடி பரீட்சை Step - 02

வினாத்தாள் II

சுட்டெண்: ..... தரம்: 05 நேரம்: 1மணி 15 நிமிடம்

பாடசாலை: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

1. உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
2. மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
3. இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக. (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன.)
4. விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
5. விடையின் கீழ் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது கோட்டினை மாத்திரம் எழுதுக.
   நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்

இறுதிப் புள்ளி	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திறகேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்	
மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	

www.keou.lk

01. பின்வரும் பந்தியை வாசித்து வினவப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை எழுதுக.

திடீரென காதுக்குள் சுளீர் என வலித்தது. யானை முறம் போன்ற தன்னுடைய காதுகளை ஆட்டி ஆட்டி பார்த்தது. வலி குறைவே இல்லை. காதுக்குள் இருந்து பேச்சுக்குரல் கேட்டது. "நான்தான் எறும்பு பேசுகிறேன். நான் மிகச் சிறியவன். இவ்வளவு பெரிய உன்னையும் அலற வைக்க முடியும்" என்றது. யானைக்கு இப்போது எல்லாமே புரிந்தது.

1. யானையின் கர்வத்தை அடக்கியது எது?

.....

2. சுளகு என்பதற்கு இப்பந்தியில் வந்துள்ள ஒத்த கருத்துச் சொல் யாது?

.....

3. இப்பந்தியில் குறிப்பிடப்படும் தன்மை ஒருமைச் சொல்லை எழுதுக.

.....

4. இப்பந்தியில் இடம்பெற்றுள்ள சினைப் பெயர் ஒன்றினை இணங்கண்டு எழுதுக.

.....

5. யானையின் பெண் எவ்வாறு அழைக்கப்படும். .....

02. சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. கோடாலி, கோடரி, கொடரி, கோடலி
2. தொழிலாளி, தொலிளாலி, தொளிளாளி, தொளிளாலி
3. வியர்வை, வியரிவை, வேர்வை, வேரிவை

03. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. அவன் காட்டு .....யால் சென்று கொண்டிருந்தான். (வளி/வழி)
2. காற்றினை ..... என்றும் அழைப்பர் (வளி/வழி)
3. கடல் ..... கரையை மோதிச் சென்றது. (அளை/அலை)

04. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

பசு கதறும் என்பது போல ஆந்தை .....

05. கீழே தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் பொருத்தமான சொல்லை எழுதி பழமொழியைப் பூரணப்படுத்துக.

ஆத்திரக் காரனுக்குப் புத்தி .....

06. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. பணத்தை அளவுக்கு அதிகமாகச் செலவு செய்பவர் .....
2. திருமணம் செய்து மனைவியை இழந்த ஆண் .....

www.ikedu.lk

சுட்டெண்: .....


07. **கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. நாம் பெரியோருடன் **ஏட்டிக்குப் போட்டியாக** கதைத்தல் கூடாது.
   தடித்த எழுத்திலுள்ள மரபுத் தொடரின் கருத்து.....
   (பிடிவாதமாக / விதன்டாவாதமாக) என்பதாகும்
2. அறுபதாவது **ஆண்டின்** இறுதியில் எடுக்கப்படும் விழா.....
   (பொன்விழா/ வைரவிழா)
3. அவன் இனிமையாகப் பாடினான். இங்கு **அவன்** என்பது .....
   (படர்க்கை ஒருமை/ தன்மை பன்மை)ச் சொல்லாகும்.

08. கீழே தரப்பட்டுள்ள கவிதையில் உள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.
   நதியிடம் கற்றுக்கொள்
   நன்மைகள் செய்வாய்!
   ம .....
   மாண்புடன் இருப்பாய்!


9. கீழுள்ள நிகழ்கால வாக்கியங்களை இறந்தகால வாக்கியங்களாக மாற்றி எழுதுங்கள்.
   1. தம்பி மரத்தை வெட்டுகிறான்.
   .....
2. புயற்காற்றினால் மரங்கள் முறிகின்றன.
   .....

10. 1. கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொல்லிற்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.
   Blue : .....



2. உருவில் தரப்பட்டுள்ள ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
   .....

11. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.



1. The book is ..... (in /on) hear) the table
2. The ball is ..... (near / in / under) the talble

12. பின்வரும் வாக்கியம் ஆங்கிலத்தில் சொல்லப்படும் விதத்தை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
   எனக்குத் தாகமாக இருக்கிறது. .....

www.ikedu.lk


13. பாடம கியலா (Dh) தென்ன என்னும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

.....

2. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

விளையாடப் போவோமா? .....

தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.




14. இந்த எண் சட்டத்தில் வகை குறிக்கப்படும் எண்ணை சொற்களில் எழுதுக.....

15. மூன்று தீக்குச்சிகளைக் கொண்டு உருவாக்கக்கூடிய பத்திலும் குறைந்த நான்கு உரோம எண்களையும் எழுதுங்கள். .....

16. 435, 654, 325, 568, 124 என்ற எண்களை ஏறுவரிசைப்படுத்தும் போது நடுவில் வரும் எண் எது? .....

17. கீழே தரப்பட்ட எண்களில் எண்கோலம் ஒன்றைப் பெற நீக்க வேண்டிய எண் எது?

9, 18, 20, 36, 72 .....



18. உருவில் உள்ள உருளையில் இருக்கும்

1. தட்டையான மேற்பரப்புக்களின் எண்ணிக்கை யாது?


.....

2. வளைந்த மேற்பரப்புக்களின் எண்ணிக்கை யாது?

.....

19. பின்வரும் பின்னங்களில் $\frac{2}{12}$ இற்கான சமவலுப் பின்னத்தை தெரிவு செய்து எழுதுக.


$\frac{1}{6}, \frac{2}{6}, \frac{3}{6}, \frac{4}{6}$ .....



20. உருவில் நிழற்றப்பட்ட பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக.

.....

21. உருவில் நிழற்றப்பட்ட பகுதியைத் தசம எண்ணாக எழுதுக.....



www.ikedu.lk

22. 130 பேனைகளை 7 பேர்களிடையே சமமாகப் பங்கிடும் போது எஞ்சும் பேனைகளின் எண்ணிக்கை யாது? .....

23. இரவு 8.30 மணிக்குப் புத்தகம் ஒன்றை வாசிக்க ஆரம்பித்த செல்விக்கு அதனை வாசித்து முடிப்பதற்கு ஒரு மணித்தியாலம் 35 நிமிடங்கள் எடுத்தது. அவர் புத்தகத்தை வாசித்து முடித்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் (நியம நேரத்தில்) இலக்கத்தில் எழுதுக.....

24. ஒரு புத்தகத்தின் விலை ரூபாய் 60 எனவும் ஒரு பென்சிலின் விலை ரூபாய் 12 எனவும் கடை ஒன்றின் விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது.


1. கடைக்குச் சென்ற குமாருக்கு மூன்று புத்தகங்களையும் ஒரு பென்சிலையும் வாங்குவதற்குத் தேவையான பணம் எவ்வளவு?.....

2. குமார் மூன்று புத்தகங்களையும் ஒரு பென்சிலையும் வாங்கிக் கொண்டு கடை உரிமையாளருக்கு ரூபா 50 காசுத்தாள்கள் 4ஐக்கொடுத்தாராயின் அவருக்கு கிடைத்த மீதிப் பணம் எவ்வளவு? .....

25. ஒரு தோட்டத்தில் ஜூலை மாதம் 5387 தேங்காய்களும் ஓகஸ்ட் மாதம் 6021 தேங்காய்களும் பறிக்கப்பட்டன. ஜூலை மாதம் பறித்த தேங்காய்களின் எண்ணிக்கைக்கு ஓகஸ்ட் மாதம் பறித்த தேங்காய்களின் எண்ணிக்கை சமமாக வேண்டுமாயின் ஓகஸ்ட் மாதம் பறித்த தேங்காய்களில் எத்தனை தேங்காய்களை நீக்க வேண்டும்?

.....

26. உருவில் தகவல்களுக்கேற்ப அட்வணையில் உள்ள வெற்றிடத்தை நிரப்புக.



இருந்து	வரைக்கும்	தூரம்
கொழும்பு	அம்பாந்தோட்டை	245 கி.மி
கொழும்பு	மாத்தறை	160 கி.மி
காலி	அம்பாந்தோட்டை	125 கி.மி
காலி	மாத்தறை	..... கி.மி

27. ஒரு வரிசையில் அமலன் முன்னால் இருந்து பார்க்கும்போது 8வது நபராகவும் பின்னால் இருந்து பார்க்கும்போது 9ஆவது நபராகவும் காணப்பட்டார் எனின் அவ்வரிசையில் நின்றவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? .....

28. 6 மீற்றர் நீளமான கம்பித்துண்டில் 25 சென்றிமீற்றர் நீளமான ஒரு துண்டு வெட்டி எடுக்கப்பட்டது. மிகுதித் துண்டின் நீளம் யாது? .....

29. 124 மாபிள்களை நான்குபேர் சமனாகப் பகிர்ந்தால் ஒருவருக்குக் கிடைக்கும் மாபிள்களின் எண்ணிக்கை யாது? .....

www.ikedu.lk

30- 59 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

30. இலங்கையில் கடற்கரை இருக்கும் ஒரு மாகாணம்
1. சப்பிரகமுவ மாகாணம் 2. மத்திய மாகாணம் 3. ஊவா மாகாணம் 4. வடமேல் மாகாணம்

31. நீருக்கு இருக்கக்கூடிய ஓர் இயல்பாக அமையாதது.
1. நிலையான வடிவம் இருத்தல்
2. வெப்பமாக்கும் போது நீராவி வெளியேறல்
3. கொண்டிஸ் தூளினால் நிறமூட்டப்படல்
4. குளிர்த்தும் போது பனிக்கட்டியாக மாறுதல்.

32. பச்சையாக வெட்டிய எம்மரக்கறித் துண்டுகள் சிலவற்றை பாத்திரத்தில் உள்ள நீரில் இடும்போது அந்நீர் நிறம் பெறும்?
1. கத்தரிக்காய் 2. பூசனிக்காய் 3. கரட் 4. பீற்றூட்

33. நுரைச்சோலை மின்வலு நிலையத்தின் படம் அச்சிடப்பட்டுள்ள இல்கைக்காசுத்தாள்
1. ரூபாய் 20 2.ரூபாய் 50 3.ரூபாய் 100 4. ரூபாய் 500

34. இலங்கைக்கு மிகவும் அண்மையில் அமைந்துள்ள நாடுகள் மாத்திரம் அடங்கும் விடையைத் தெரிவு செய்க.
1. மாலைதீவு, நேபாளம், பூட்டான் 2. பாக்கிஸ்தான், ஜப்பான், பங்களாதேஷ்
3. இந்தியா, ரஷ்யா, நேபாளம் 4. பங்களாதேஷ், சீனா, மாலைதீவு

35. செயற்கை நிறப்பொருட்கள் சுவையூட்டிகள் ஆகியன சேர்க்கப்பட்ட உணவுகளை உட்கொள்வதால் ஏற்படக்கூடிய நோய்
1. நீர்வெறுப்பு நோய் 2. புற்று நோய் 3. நெருப்புக்காய்ச்சல் 4. நீரளிவு

36. நாற்றுமேடைகளிலிருந்து நாற்றுக்கள் பெறப்பட்டு பாத்திரங்களில் நடப்படுகின்ற பயிர்வகைகளை மாத்திரம் கொண்ட விடைகளைத் தெரிவு செய்க.
1. போஞ்சி,வெண்டி, பசளி 2. போஞ்சி, தக்காளி, கறிமிளகாய்
3. கத்தரி, பசளி, தக்காளி 4. கறிமிளகாய், கத்தரி, தக்காளி

37. ஒரு வித்தினை மாத்திரம் கொண்ட பழம்
1. நெல்லி 2. விளாம்பழம் 3. மங்குஸ்தான் 4. மாதுளை

38. ஒரு குறித்த காலத்திலன்றி வருடம் முழுவதும் பூக்கும் தாவர வகை பின்வருவனவற்றுள் எது?
1. இறப்பர் 2. தென்னை 3. முள்முருங்கை 4. ரம்புட்டான்

39. பெரும்பாலும் ஆடைகளில் விலங்குகளின் உடல்களில் ஒட்டி பரம்பலடையும் வித்து
1.எண்ணெய் 2. துத்திரிதி 3. காசித்தும்பை 4. எருக்கலை

40. "நீர்ப்பிசாசு" அமைப்பு யாருக்கு பயன்படும்?
1. விவசாயிகளுக்கு 2. மீனவர்களுக்கு 3. சுழியோடிகளுக்கு 4. நீச்சல் வீரர்களுக்கு

41. இலங்கையில் பரவும் பெரும் எண்ணிக்கையான கொள்ளை நோய்களுக்கு காரணமாக அமையும் பிராணி வகை?
1. எலி 2. நாய் 3. நுளம்பு 4. ஈ

www.ikeduk.lk

42. பிரபல எழுத்தாளராகவும் வானியல் விஞ்ஞானியாகவும் உலகிற்கு சிறந்த சேவையாற்றியவர்

1. சேர் ஆதர்சி கிளார்க்
2. சேர் டி.பி. ஜெயதிலக்க
3. சேர் டி.பி. ஜாயா
4. கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

43. இலங்கைக்கு முதன் முதலாக ஒலிம்பிக் பதக்கம் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தவர் யார்?

1. சுசந்திகா ஜயசிங்க
2. டங்கன் வைட்
3. ஜோலியன் போலிங்
5. தீபிகா சன்முகம்

44. பின்வருவனவற்றுல் சமூக விரோதச் செயற்பாடு அல்லாதது.

1. போதைப்பொருள் வியாபாரம்
2. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்.
3. புகையிரத நிலையத்தில் புகைபிடித்தல்
4. பஸ்வண்டியில் உணவுப் பொருட்களை விற்றல்.

45. குளம் ஒன்று காணப்படும் இடத்தை குறித்துக் காட்டுவதற்க இலங்கைத் தேசப்படங்களில் பயன்படுத்தப்படுவது

1. நீல நிற நீண்ட கோடு
2. நீல நிற கோட்டின் மீது இடப்பட்டுள்ள புள்ளி
3. நீல நிறத்தில் நிறந்தீட்டப்பட்டுள்ள சிறிய பிரதேசம்
4. ஒரு இடத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள நீலநிற கோடுகள் சில

46. பாடசாலைத் தோட்டத்தில் மிளகாய்ப் பாத்தி ஒன்றை தயார் செய்வதற்கு தெரிவு செய்ய வேண்டியது.

1. சூரிய ஒளி குறைவாகக் கிடைக்கின்ற பாரிய மரங்கள் உள்ள கற்களைக் கொண்ட தரையாகும்.
2. கற்களைக் கொண்ட நீர் வடிந்தோடும் சமதரையாகும்.
3. சூரிய ஒளி நன்கு கிடைக்கின்ற நீர் வழிந்தோடும் கற்கள் அற்ற சமதரையாகும்.
4. சூரிய ஒளி மிகக் குறைகவாகக் கிடைக்கின்ற பாரிய மரங்களைக் கொண்ட கற்களற்ற சமதரையாகும்.

47. நபர் ஒருவருக்கு வானவில் தென்படக்கூடிய சந்தர்ப்பம் பின்வருவனவற்றில் எது?

1. மின்னலுடன் பெருமழை பெய்யும்போது
2. பெருமழையுடன் காற்று வீசும்போது
3. சூரிய ஒளியுடன் சிறுமழை பெய்யும்போது
4. சூரிய ஒளியுடன் உலர்காற்று வீசும்போது.

48. இலங்கையில் பொது வாகனங்கள் மூலம் ஆற்றப்படும் போக்குவரத்துச் சேவை பொதுமக்களுக்கு மிகவும் பிடித்தமான சேவையாக அமைவதற்குப் பின்வரும் எந்த யோசனையை நடைமுறைப்படுத்துவது மிகப் பொருத்தமானதாகும்?

1. குறித்த கால அட்டவணைக்கு ஏற்பப பொது வாகனங்களும் பயணம் செய்தல்.
2. பொது வாகனங்களில் தொலைக்காட்சி வானொலிப்பெட்டி ஆகியவை இயக்கப்படுதல்.
3. மதிய வேளைகளின்போது பொது வாகனங்களின் ஓட்டங்களை மட்டுப்படுத்தல்.
4. பயணிக்கும்போது சில நிறுத்தும் இடங்களில் மாத்திரம் பொது வாகனங்களை நிறுத்துதல்.

49. தீபற்றியதன் காரணமாக உடலின் ஒரு பகுதி எரிந்த நபரொருவருக்கு முதலுதவியைப் பெற்றுக் கொடுக்கையில் எம்மால் முதலில் செய்ய வேண்டியது எது?

www.ikeou.lk

1. எரிந்த பகுதியில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஆடைகளை அகற்றுதல்.
2. எரிந்த பகுதியின் மீது எண்ணெய் வகை ஒன்றைப் பூசுதல்.
3. கொப்புளங்கள் மீது பூச்சு வகை ஒன்றைப் பூசுதல்.
4. சுத்தமான குளிர்நீரால் எரிந்த பகுதியைக் குளிர்மையாக்கல்.

50. சகல சௌபாக்கியங்களையும் கொண்ட தன்னிறைவான இந்நாட்டில் சூரியனும் சந்திரனும் நிலைத்திருக்கும் காலமெல்லாம் தார்மீகத்தைக் காத்தவாறு நாட்டு மக்கள் யாவரும் இருப்பார்களாக! இக்கருத்தை வெளிப்படுத்துவது இலங்கையின்
1. தேசியக்கொடி 2. அரச இலச்சினை 3. தேசிய மரம் 4. தேசிய கீதம்

51. இலங்கைக்கே உரித்தான முலையூட்டி விலங்கு
1. நீலப்புள் 2. புள்ளிக்கோட்டி 3. கருங்குரங்கு 4. மலைப்பாம்பு

52. ஆழமான கிணற்றிலிருந்து நீரை மேலே எடுப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற வேலையை இலகுவாக்கும் பொறி?
1. நீர்ச்சில்லு 2. பற்சில்லு 3. திருகுபிடி 4. கப்பி

53. வானில் மிக உயரத்தில் பறக்கின்ற கூர்மையான கண்களையுடைய ஊன்உண்ணும் பறவை எது?
1. சென்பகம் 2. கழுகு 3. ஆந்தை 4. மழைக்குருவி

54. மகாவலி ஆறு கடலுடன் சேரும் இடத்தை அண்டிய நகரம் எது?
1. திருகோணமலை 2. மட்டக்களப்பு 3. முல்லைதீவு 4. புத்தளம்

55. மரவேலைப்பாடுகளுக்குப் பிரசித்திபெற்ற இடம் எது?
1. யாப்பகுவ காவலரண் 2. லோவாமஹாபாய
3. அம்பக்கை தேவாலயம் 4. இசுறுமுனி விகாரை

56. எல்லா சமயத்தினரும் வணங்கி துதிக்கும் சிவனொலிபாதம் அமைந்துள்ள மாகாணம்எது?
1. ஊவா 2. மத்திய 3. கிழக்கு 4. சப்ரகமுவ

57. இலங்கையின் தேசியக் கொடி, அரச இலட்சினை ஆகிய இரண்டிலும் காணப்படும் குறியீடு எது?
1. பூவிதழ்கள் 2. நிறைகுடம் 3. அரச இலைகள் 4. வாளேந்திய சிங்கம்

58. எமக்கு தகவல்களை நேரடியாக வழங்கத்தக்க ஊடகம்
1. பத்திரிகை 2. கையேடுகள் 3. வானொலி 4. அறிவித்தல்

59. தபால் பெட்டியில் குறிப்பிடப்பட்டிருப்பது
1. திறந்து வைத்தவரின் பெயர் 2. கடிதம் கொண்டிருக்க வேண்டிய கூடிய நிறை
3. கடிதங்களை எடுக்கும் நேரம் 4. கடிதங்களை எடுக்கும் திகதி

60. மகாவலி கங்கை எமது நாட்டுக்கு ஒரு வளமாக அமைந்து காணப்படுவதோடு எமது நாட்டையு ம் அழகுபடுத்துகின்றது. இலங்கையை அழகுபடுத்தும் மகாவலி கங்கை எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

.....

.....

.....

www.keodu.lk